## அரையாண்டுத்தேர்வு 2025

## பள்ளிக்கல்வித்துறை

**+ 2 பொதுத்தமிழ் விடைக் குறிப்பு வேலூர் மாவட்டம்**

**பல்வுள் தெரிக** **பகுதி-1** **14x1=14**

1. அ. உ.வே. சாமிநாதர்
2. ஆ. வயதில் சிறியவர், ஆனாலும் தலைவர்.
3. ஆ சூது
4. அ. நிகண்டு
5. ஈ ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.
6. ஈ 1,3 இரண்டும் சரி
7. இ. மழைத்துளிகள்
8. இ. காண்டம்
9. ஆ உயர்திணை அ`றிணை
10. இ. 1-ஈ 2.இ 3. அ 4. ஆ
11. ஆ. பட்டினப்பாலை
12. இ. கடலாட்டு விழா
13. இ. அஞ்சிறைத் தும்பி
14. ஆ. மார்லன் பிராண்டோ.

---

பகுதி-2

பிரிவு-1 **3x2=6**

15. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.

புக்கில் : தற்காலிகமாகத் தங்குமிடம்.

தன்மனை : திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம்.

---

16. குழல், யாழ், மத்தளம், முழவு, இடக்கை வாத்தியம்.

---

17. நல்ல இனத்தைவிடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை.

தீய இனத்தைவிடத் துண்பத்தை தரும் பகையும் இல்லை.

---

18. 1) இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே! இது என்னே!

2) வானம் இடிந்து விழவில்லையே!

3) கடல் நீர் வற்றிப் போகவில்லையே!

4) இந்த உலகம் இன்றும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ.....

என மக்கள் புலம்பினர்.

---

பிரிவு-2

**2x2=4**

19) முகலாயக் கட்டடக் கலை, பிரித்தானியக் கட்டடக்கலை, இந்தியப் பாரம்பரிய பாணி ஆகியவற்றகைக் கலந்து உருவாக்கப்பட்டது.

---

20) * தமிழரது கலைத்திறனை எடுத்துரைக்கும் நூல்

* கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல்.

---

21) * சங்க காலத்தில் கண குழு சமூகத்திற்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்,

* தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

---

பிரிவு-3

22) (அ) முன் **7x2=14**

அவன் முன் வந்து கூறினான்

அவன் முன் வந்து கூறினான்.

(ஆ) தானே - அவன் தானே சொன்னான்.

அவன் தானே சொன்னான்.

---

23) பூக்கள் தோறும் சென்று தேனைத் தேடி
அலையும் தேனியைப் போன்று
சுறுசுறுப்பாக இருப்பதே சிறப்பு ஆகும்.

---

24) அ. வாழைத்தோப்பில் குயில்கள் கூவிக்கொண்டும்.

காகங்கள் கரைந்து கொண்டும் இருந்தன.

ஆ. பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர்.

---

25) சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்

அ) சாய் = பகுதி

ப் = சந்தி

ப் = எதிர்கால இடைநிலை

ஆன் = ஆண் பால் வினை முற்று விகுதி

ஆ) கலங்கி = கலங்கு + இ

கலங்கு = பகுதி

இ = வினையெச்ச விகுதி

---

26) அ) தலைக்கோல் = தலை + கோல்

விதி :: இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்

= தலைக்கோல்

---

ஒருமையுடன் = ஒருமை + உடன்

(ஆ) (1) விதி : இஈஐ வழி 'ய்' வும்

ஒருமை + ய் + உடன்

(2) விதி : உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

= ஒருமையுடன்

---

27) மக்களுக்கு நலன் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல்.

---

28) (அ) வணிக மேலாண்மை

(ஆ) துணை வேந்தர்

---

29) களம், கலம்

போர்க்களத்தில் வீரர்களுக்கு

கலத்தில் நீர் தரப்பட்டது.

---

30) அ) இன்று மாலை கபடிப் போட்டி நடைபெறும்

ஆ) ஐப்பசி அடை மழையில் ஊருணி நிறைந்தது.

---

பகுதி -3
பிரிவு -1

எவையேனும் இரண்டனுக்கு விடையளி **2x4=8**

31) இடம்: நக்கீரர் இயற்றிய நெடுநல் வாடையில் இவ்வரிகள் இடம் பெற்றுள்ளன.

பொருள்: கன்றுகளுக்குப் பால்கொடுக்கும் மாடுகள்,
பால் குடிக்க வரும் கன்றுகளைத் தவிர்த்து
குன்றையே குளிர்விப்பது போல
குளிர் காலத்து நள்ளிரவு இருந்தது.

விளக்கம்:

வலப்பக்கமாக சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. அதனால் விலங்குகளுக்கும், கோவலர்களுக்கும் ஏற்பட்ட நிலையையும் கூறுவதோடு குன்றுக்கே குளிர்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

32. சினத்தால் வரும் கேடு

முகத்தில் தோன்றும் முகமலர்ச்சியையும், கொள்கின்ற சினத்தை விட நமக்கு வேறு பகை இல்லை.

ஒருவர் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால் சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு காக்கா விட்டால், சினம் நம்மையே அழித்து விடும்.

இனம் தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்புப் போன்று m`J ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

---

33) உவமை: நோயாளன் போல்

உவமை: சுட்டும் செய்தி:

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்பதனை உணர்ந்த நோயாளி அவரை நேசிப்பார்.

அது போன்று வித்துவக் கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பங்களை எனக்கு தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்போதும் எதிர்பார்த்து வாழ்வேன் என்கிறார் குலசேகராழ்வார்.

34) இராமன் காட்டிற்குள் சென்று துன்புறிவானே என்று குகன் வருத்தினான் அதை உணர்ந்த இராமன் குகனிடம் "நாங்கள் நால்வர் உடன் பிறந்தவர் என்றிருந்தோம் இப்போது உன்னையும் சேர்த்து ஐவர் ஆகின்றோம்" என்றார்.

"பின் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம் என்றார்.

"உள்ளத்தில் அன்பு கொண்டு எங்களிடம் வந்த அன்பனான வீடணனோடுச் சேர்த்து எழுவரானோம்" என்று கூறினான்.

---

பிரிவு:2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2 x 4 = 8**

35) சென்னை அறிவின் நகரம் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக?

இன்று சென்னையின் புகழுக்குச் சான்றாக நிற்கும் பல்வேறு கல்வி நிறுவனங்கள் ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டவை.

<u>அறிவின் நகரம் சென்னை:</u>

1812 - சென்னை கோட்டைக் கல்லூரி

1837 - கிறித்துவக் கல்லூரி

1840 - பிரசிடென்சி பள்ளி (மாநிலக்கல்லூரி)

1857 - சென்னைப் பல்கலைக் கழகம்.

1914 - இராணிமேரி கல்லூரி.

போன்ற பல்வேறு கல்விநிறுவனங்கள் சென்னையின் கல்வி வளர்ச்சிக்குப் பெருபங்காற்றின.

மேலும் பச்சயைப்பன் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, கவின் கலை கல்லூரி, மாற்று திறனாளிகளுக்கான பள்ளி, போன்றவையும் அச்சுப்பரவல், நாளிதழ் பெருக்கம் ஆகியவையும் சென்னையின் அறிவு வளர்ச்சிக்குத் துணைநின்றன.

---

36) மணலில் எழுதியது முதல்தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்.

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகினார்கள். அதனால் எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்தது.

உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத, அதன் மேல் பிள்ளைகள் எழுதினார்கள்.

பிறகு தாமே எழுதிப் பழகினார்கள்.

பனையோலையில் எழுதுவதற்கு பல வகையான எழுத்தாணிகளைப் பயன்படுத்தினர்.

இன்று அறிவியல் வளர்ச்சியால் வெள்ளைத் தாள்களை உருவாக்கி எழுதுகொலில் கைவிட்டு எழுதும் முறை உள்ளது.

கணினியைத் கொண்டு நேரடியாக அதன் திரையில் தட்டச்சு செய்து எழுதும் பழக்கமும் இன்று பிரபலமாகி வருகிறது.

அறிவியலின் வளர்ச்சி காரணமாக தம் எண்ணங்களைக் கணினியே நேரடியாக தட்டச்சு செய்யும் முறையும் ஆய்வு நிலையில்வெற்றி பெற்றுள்ளது.

இனி வரும் காலங்களில் ஒருவர் நினைப்பதைக் கணினி தானாகவே எழுதும் முறை ஏற்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

---

37) திரைப்படத்தின் காட்சி ஆற்றல் சான்றுடன்:

<u>காட்சியின் ஆற்றல்:</u>

காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுவது திரைப்படத்தில் காட்சிகள் சிறப்பாக அமைந்தால் வசனம் தேவையில்லை

திரைப்படத்தில் வசனம் இன்றிக் காட்சிகளை அடுத்தடுத்து வைப்பதன் மூலம் கதை சொல்வார்கள்.

<u>சான்று</u>

முதல் காட்சியில் தோழியிடம் தொடர்வண்டி பயணச் சீட்டைப்பெறும் கதாநாயகி அடுத்த காட்சியில் தொடர் வண்டியில் இப்பாள்.

எண்:7 வீரையா தெரு என்று முகவரியைச் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அந்த முகவரியில் சென்று காட்சி நிற்கும்.

காட்சி மறைவு:

காட்சிகள் மாறுவதை உணர்த்த ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாக்கி இருள் காட்சியாக மாற்றுவர். இதைக் காட்சி மறைவு என்பர்.

காட்சி உதயம்:

ஒரு காட்சி மறைந்து அடுத்த காட்சி தொடங்கும், போது இருட்டாக இருந்த பின் சிறிது சிறிதாக வெளிச்சமாக்கிப்பின் முழுக் காட்சியும் வெளிப்படுவது "காட்சி உதயம்" எனப்படும்.

கலவை (அ) கூட்டு

ஒரு காட்சி மறையும் போது அடுத்த காட்சி தெரியத் தொடங்குவது கலவை (அல்லது) கூட்டு எனப்படும்.

அழிப்பு:

பழைய காட்சியை அழித்துக் கொண்டே அடுத்த காட்சி தோன்றுவதை அழிப்பு என்பர்.

இப்படிப் பல்வேறு உத்திகள் இயக்குநராலும் தொகுப்பாளராலும் காட்சி நகர்வுக்கெனப் பயன்படுத்தப்படுகின்றன.

---

38. குறிப்பு வரைக:

அ) சிறு காப்பியம் என்றால் என்ன?

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிறுகாப்பியம்.

ஆ) பாவிகம்:

காப்பியத்தின் பண்பாகப் பாவிகம் என்பதனைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது.

காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே 'பாவிகம்' என்பர்.

---

பிரிவு:3

எவையேனும் மூன்றுனுக்கு விடை தருக

39. அ. ஏகதேச உருவக அணி **3 x 4 = 12**

சான்றுடன்

<u>அணி விளக்கம்:</u>

ஒரு பொருளை உருவகம் செய்து, அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

<u>சான்று</u>

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்.

<u>அணிப்பொருத்தம்:</u>

இனத்தைத் தெப்பமாக உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகப்படுத்தவில்லை. எனவே இது ஏகதேச உருவக அணிக்குப் பொருத்தம் ஆயிற்று

ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது”

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி நிரல் நிறை அணி ஆகும்.

<u>அணி விளக்கம்:</u>

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப் படியே பொருள் கொள்ளச் செய்வது நிரல் நிறை அணி ஆகும்.

அணிப்பொருத்தம்.

“அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கை என்று கூறிவிட்டு அதற்கு இணையாகப் பண்புடையதாகவும், பயன் மிக்கதாகவும் அது அமையும் என வரிசை முறைப்படி பொருள் கொள்ளுமாறு வருவதால், இது நிரல் நிறை அணிக்குப் பொருத்தமாயிற்று.

40. இலக்கிய நயம் பாராட்டுக:

திரண் கருத்து:

நாம் தமிழ்மொழியை தபின்னுக்குத் தள்ளி பிறமொழிக்கு சிறப்பு செய்த தவறை நீக்கி “தமிழ்மொழி உலக மொழிகளுள் இனிய மொழி, அதை கற்று அதன் இனிமையை காண்பாய்” மற்றும் கம்பனும், வள்ளுவனும், சிறந்த தமிழ் புலவர்கள் என்ற உண்மையை நமக்கு சொன்னவர் “பாரதி” எனவே தெய்வக்கவியான பாரதி ஓர் ஆசான் என்கிறார் நாமக்கல் கவிஞர்,

<u>மையக்கருத்து:</u>

பாரதி, ‘தமிழ்மொழி உலக மொழிகளுள் இனிய மொழி: கம்பனும், வல்லுவனும் சிறந்த தமிழ்ப் புலவர்கள் என்ற உண்மையை தெரிவித்தார். எனவே பாரதி ஓர் ஆசான் என்றார் நா.கவிஞர்.

<u>மோனை நயம்</u>

ஒரு செய்யுளில் சீர்களிலோ, அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.

<u>சான்று</u> <u>பி</u>ன்னால்,
<u>பி</u>றமொழி, <u>பி</u>ழை
<u>க</u>ற்றுணர்ந்தே – கம்பனொடு
<u>தெ</u>ற்றெனநம் - <u>தெ</u>ய்வக்கவி

<u>எதுகை நயம்:</u>

ஒரு செய்யுளில் அடிகளில் சீர்களில் இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை

பெற்றெடுத்த, ஊற்றெடுத்தே,

கற்றுணந்தே – தெற்றென

பிறமொழி – சிறப்பளித்த

<u>சுவை நயம்:</u>

உணவுக்குத்தேவை அறுசுவை

செய்யுளுக்குத் தேவை ஒண்பான் சுவை.

என்பதற்கேற்ப இப்பாடலில் பெருமதிச் சுவை பயின்று வந்துள்ளது.

அணி நயம்:

தமிழின் சிறப்பை மிகவும் உயர்வாகத் திறம்பட ஆசிரியர் உயர்வு நவிற்சி அணி வாயிலாக எடுத்தியம்பி உள்ளார்.

(எவையெனும் மூன்று நயங்கள்)

---

41. உண்டால் அம்ம... பொதுவியல் திணைக்கு

அ) உரியது என்பதை நிறுவுக:

உண்டால் அம்ம எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலானது வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகள் மற்றும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுகிறது அதாவது.

தமக்காக உழைக்காமல் பிறருக்காக உழைப்பவர்கள் அமிழ்தமே கிடைத்தாலும் தனித்து உண்ண மாட்டார்கள்,

யாரையும் வெறுக்க மாட்டார்கள்

சோம்பலின்றிச் செயல்படுவார்கள்.

பிறர் அஞ்சக் கூடியவற்றுக்குத் தாமும் அஞ்சுவார்கள்.

புகழ் கிடைக்கும் என்றால் தம் உயிரையும் கொடுப்பவார்கள்.

உலகம் முழுவதும் கிடைப்பதாக இருந்தாலும் பழி வரும் செயல்களைச் செய்யமாட்டார்கள்.

எதற்கும் மனம் தளர மாட்டார்கள் என்ற பொதுவான செய்திகளைக் கூறுவதால் இப்புறநானூற்றுப் பாடல் பொதுவியல் திணைக்கு உரியதாயிற்கு.

ஆ) வாகைத் திணையைச் சான்றுடன் விளக்கு:

<u>திணை விளக்கம்.</u>

வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவை சூடி வெற்றியை கொண்டாடுவது வாகைத் திணை.

திணைப் பொருத்தம்:

போர்ப் பாசறையில் இருக்கும் பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் தலைவனுக்கு வெற்றிபெறக் காரணமாக நல்வாடையாக இருப்பதால், வாகைத் திணையானது இப்பாடலுக்குப் பொருந்துகிறது.

---

42.. அ) ஆனைக்கும் அடிசறுக்கும்.

<u>பழமொழி விளக்கம்:</u>

எப்போதும் வெற்றி பெறுபவர் ஏதாவது ஒரு நேரத்தில் தோல்வி அடையக் கூடும் இதனை 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்கள்

வாழ்க்கை நிகழ்வு:

தியா பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி நன்கு படித்து வகுப்பில் முதல் மாணவியாக வருவாள். அனைத்து போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெறுவாள்.

ஆண்டு இறுதி தேர்வு நடந்து கொண்டிருந்தது.

அவளுக்கு திடீரென்று உடல் நிலை சரியில்லை.

அவளால் தேர்வுக்கு படிக்க முடியவில்லை அதனால் சரியாக தேர்வு எழுத முடியவில்லை.

அனைத்து பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெறும் தியா இந்த தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றாள்.

இதுவே 'ஆணைக்கும் அடிசறுக்கும், என்ற பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

<u>நீதி</u>

நாம் எப்போதும் வெற்றி பெற்று கொண்டே இருப்போம் என்ற எண்ணம் இருக்கலாம், ஆனால் சில நேரங்களில் தோல்வியையும் அடையக் கூடும் இதுவே "ஆணைக்கும் அடிசறுக்கும்" என்ற பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

<u>பழமொழி விளக்கம்:</u>

முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து செய்தால் வாழ்வில் உயர்வு கிட்டும்.

<u>வாழ்க்கை நிகழ்வு:</u>

சங்கீதா ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி,

சங்கீதா தமிழ் வாசித்தாலும், ஆங்கிலம் வாசித்தாலும் தவறாக வாசிப்பதைக் கேட்டு வகுப்பே சிரிக்கும்.

ஆனால் அவள் அதற்காக வெட்கப்படவில்லை.

கண்ணாடி முன்பு உரக்க வாசித்துப் பேசப் பழகினாள்.

அப்போது பொங்கல் விழாவினைக் குறித்துப் பேச்சுப் போட்டிக்குப் சங்கீதா தன் பெயரை கொடுத்தாள்.

அவளைப் பார்த்து அனைவரும் ஏளனம் செய்தனர். “இவளா பேசப் போகிறாள்” என்று கூறி அவள் மனதை புண்படுத்தினர். ஆனால், அவள் தன் அம்மா, அப்பா, தங்கை முன்னிலையில் வீட்டில் பேசப் பழகினாள்.

போட்டியில் சிறப்பாக பேசி முதல் பரிசை வென்றாள்.

“இதுவே எறும்பு ஊரக் கல்லும் தேயும்” என்ற பழமொழிக்கு சான்றானது.

---

43. 1. குழந்தையின் மன வளர்ச்சியுடன் தொடர்புடையது மொழி வளர்ச்சி.
    2. மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும்.
    3. தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல்.
    4. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெறும்.

---

பகுதி-4

<u>44. அ. அரங்க அமைப்பு</u> **3x6=18**

<u>தன்னிலம் தேர்தல்</u>

திறம்பட கற்றுணர்ந்த சிற்ப நூலாசிரியர்கள் சொல்லப்பட்ட இயல்பு களிலிருந்து மாறுபடாத நன்னிலத்தை அரங்கிற்காக தேர்ந்தெடுத்தனர்.

அரங்கின் அளவு:

பொதிகை மலை போன்ற மலைகளிலே நீண்டு வளர்ந்த மூங்கில்களிலே கணுக்களிடையே 1 சான் அளவு கொண்ட மூங்கிலை அளவு கோலாகக் கொண்டனர்.

அதில் 7 கோல் அகலமும், 4 கோல் நீளமும், 1 கோல் உயருமும் உள்ளவான நாட்டிய அரங்கை அமைத்தனர்.

அரங்கின் அமைப்பு:

உத்திரப் பலகைக்கும், தரைத் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடைவெளி 4 கோல் அளவாக இருந்தது.

உள்ளே செல்லவும், வெளியே வரவும் 2 வாயில்கள் அமைக்கப்பட்டன.

மேல் மாடத்தில் ஐம்பூதங்களை சித்தரித்து வைத்தனர்.

ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி என்று 3 வகையான எழினிகளை அமைத்தனர்.

தூண்களில் நிழல் அரங்கில் விழாதபடி நிலை விளக்குகளை நிறுத்தினர்.

சிறந்த முத்துககளால் ஆன மாலைகளை அரங்கம் முழுவதும தொங்கவிட்டனர்.

44 ஆ) கருவி

அறிவு என்பது அதை உடையவருக்கு அழிவுவராமல் காக்கும் கருவியாகும். பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பு மிகுந்த அரணும் (கோட்டை, சுவர்) அதுவே ஆகும்.

அறிவற்றம் காக்கும்...............

ஆகா அரண்.

அறிவு:

நமது மனத்தை அது போகும் போக்கில் செல்ல விடாது. தீமை யிலிருந்து அதைத்தடுத்து, நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

துன்பம் இல்லை

பின்னால் வரப்போகும் துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளும் அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

எதிரதாக் காக்கும்...............

.... வருவதோர் நோய்.

---

45) (அ) முன்னுரை:

குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிற குடும்பம் ˙என்ற இந்த உயர்ந்த அமைப்பின் மூலமே உலகச் சமூகம் இயங்கி வருகிறது.

குடும்பம் என்னும் சொல்:

குடும்பம் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணம் ஆகும். நாணயத்தில் இரு பக்கங்களைப் போல குடும்பமும் திருமணமும் சார்ந்தே செயல்படுகின்றன. திருமணம், குடும்பம் என்னும் சொல் முதன் முதலில் திருக்குறளில் தான் பயின்று வருகிறது. குடும்பு என்னும் சொல்லுடன் ‘அம்’ விகுதி சேர்ந்து “குடும்பம்” என்றானது. குடும்பு என்றால் கூடி வாழ்தல் என்று பொருள்,

குடும்பங்களில் வாழிடங்கள்:

1. தற்காலிகமாகத் தங்கும் இடம் ‘புக்கில்’ ஆகும்.
2. திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் தன்மனை ஆகும்.
    1) கணவனின் இல்லாம் நும்மனை
    2) மனைவியின் இல்லம் தம்மனை

3) மணம் புரிந்து கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் இல்லற வாழ்வின் தொடக்கமே ‘மணந்தகம்’ ஆகும். தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

<u>தாய்வழிக்குடும்பம்:</u>

சங்க காலத்தில் கண(குழு) சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்.

பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய் முறை இருந்தது. குடும்பத்தின் சொத்தும் வளங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என்று குறுந்தொகையில் உள்ள மருதத்திணை பாடல் ஒன்று கூறுகிறது.

<u>தந்தை வழிக்குடும்பம்:</u>

மண மக்களின் வாழ்விடம் கணவன் மனைவி என்றானது. பெண் தன் கணவனையே சார்ந்து இருந்தாள். இது ஒரு வலுவான பரவலான முறையாக இருந்தது. மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே.

<u>தனிக்குடும்பம்</u>

தாய், தந்தை, குழந்தை என மூவருமுள்ள குடும்ப தனிக்குடும்பம் ஆகும். இது மிகவும் நெருக்கமானதும், எளியதுமான குடும்பமாகும்.

தனிக்குடும்ப முறை, சமூகப்படி நிலையில் இறுதியாக ஏற்பட்ட ஒன்றாகும்.

<u>பிரிந்த குடும்பம்:</u>

சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு பிரிவடைந்து இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் விரிந்த குடும்ப அமைப்பு முறை உருவானது.

<u>(ஆ) முன்னுரை:</u>

மயிலையாரின் பல ஆய்வுகள் தமிழுக்கு முதன் முதலாக வழங்கப்பட்டவை, இவரது ஆய்வுகள் அறிஞருக்கு மட்டுமின்றிப் பொது மக்களுக்கும் அறிவு விருந்தோம்பியவை.

தொடக்கால ஆய்வுகள்:

ச.த. சற்குணர் அவர்களின் உரையால் ஈர்க்கப்பட்ட மயிலையார் ‘‘கிறித்துவமும் தமிழும்’ என்னும் நூலை இயற்றினார்.

அதன் பின் தமிழின் தொல் இலக்கியம், தொல்கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக ‘பௌத்தமும் தமிழும்’ ஆகிய நூல்களை இயற்றினார்.

<u>வரலாற்று ஆய்வுகள்:</u>

கி.பி 3ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் மயிலையார் ஈடுபட்டார்.

அதன் விளைவாய் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் குறித்த நூல்களை எழுதினர்.

மூன்றாம் நந்திவர்மன் பற்றி தமிழில் எழுதப்பட்ட முதல் நூல் என்னும் பெருமையை பெற்றது இவரது நூல்.

இவைத் தவிர சங்க கால மூவேந்தர்கள், கொங்கு நாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர் மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றையும் எழுதினார். களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்தைக் ‘களப்பிரர் ஆட்சியில் தமிழகம்’ என்னும் நூல் மூலம் வெளிப்படுத்தினார்.

<u>கலையில் ஆய்வுகள்:</u>

கலையில் சார்ந்த தமிழில் வெளியான பல நூல்களுக்கும் வேங்கடசாமியே வழி காட்டியாக விளங்கினார்.

தமிழரது கலைத்திறனை எடுத்தோதும், ‘தமிழில் வளர்த்த அழகுக் கலைகள்’ என்றும் நூல், கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல் ஆகும்.

மேலும் இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்ற குறிப்பிடத்தக்கது. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியவை கலை பற்றிய இவருடைய பிற நூல்கள் ஆகும்.

<u>இலக்கிய ஆய்வுகள்</u>

மயிலையாரின் ஆய்வுப்பயணம் தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டுகள் ஆகியவற்றை நோக்கி நகர்ந்தது.

மேலும் சாசனச் செய்யுள் மஞ்சரி, மறைந்து போன தமிழ் நூல்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் ஆகிய நூல்களை எழுதினார்.

மறைந்து போன தமிழ் நூல்கள் என்னும் 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை நம் முன் நிறுத்திகிறார்.

முடிவுரை:

மயிலை சினி வேங்கடசாமி ஓர் "ஆராய்ச்சி பேரறிஞர் என்பதை இக்கட்டுரை வழி கண்டோம்.

---

46 முன்னுரை

அ) 'உத்தம சோழன்' எழுதிய 'முதல்கல்' என்னும் இச்சிறுகதையில் பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன்பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலனைக் காண்போம்.

மூழ்கும் பயிரும், மருதனின் கவலையும்:

வளவனாற்றின் வடகரையில் நின்று வயல் வெளிகளை பார்த்தான் மருதன்.

நான்கு நாள் பெய்த அடைமழையில் வயலில் நடப்பட்டிருந்த இளம் பயிர்கள் நீருக்குள் மூழ்கி விடும் ஆபத்தில் இருந்தன.

வானொலியின் அபாய அறிவிப்பு மருதனை மேலும் கவலையடையச் செய்தது.

பொறுப்பும், அக்கறையும்

தண்ணீரில் முழ்கியிருந்த இளம் பயிர்களைக் கண்டு கவலையுடன் கரைவழியே நடந்தான் மருதன்.

வடிகால் மதகைக் கண்டான்.

வடிகால் வாய்க்கால் முழுவதும் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள் மண்டிக் கிடந்தன.

இந்தச் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் ஒரே நாளில் உபரி நீர் வடிந்து விடும் என்பதை உணர்ந்தான்.

மருதனின் தன்னம்பிக்கை:

ஊர் மக்களை ஒன்று திரட்டிப் பயிர்களைக் காப்பாற்ற முடிவு செய்தான் மருதன்.

தன்னம்பிக்கையோடு ஊரில் உள்ள மாரிமுத்து கிழவர் காளியப்பன். பிரேம்குமார் ஆகியோரிடம் தன் யோசனையைக் கூறி உதவி கோரினான்.

விடா முயற்சியுடன் செயல்படல்:

ஊரர் உதவி செய்ய மறுத்தாலும் விடா முயற்சி உடன் செயல்பட்டான் மருதன்.

மறு நாள் விடிவதற்குள் காட்டாமணக்குச் செடிகளை தனி ஒருவனாக நின்று வெட்டி எறிந்தான்.

மனைவி அல்லியும் அவனுக்கு உதவி செய்தாள்.

இதனைக் கண்ட மாரிமுத்துவும், கிழவர் காளியப்பனும். பிரேம்குமாரும் அவர்களுடன் இணைந்து செயல்பட்டனர்.

மருதனின் விடா முயற்சியால் பயிரும், ஊரும் காப்பாற்றப்பட்டது.

முடிவுரை:

மருதனின் விடா முயற்சி, தன்னம்பிக்கை, பொறுப்புணர்வு போன்ற பண்பு நலன்களை இச்சிறுகதை வாயிலாக அறியலாம்.

---

46 ஆ) முன்னுரை:

சூரியனைப் பிரசவிக்கும் பாறை எனும் சிறுகதை தோப்பில் முகமது மீரானின் “”வேர்களின் பேச்சு” என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.ஒருபொய்யான மூட நம்பிக்கை காலப்போக்கில் நம்பிக்கையாக மாறி பின் எவ்வாறு பகுத்தறிவால் உண்மை வெளிப்பட்டது என்ற ஆழமான கருத்தை இச்சிறுகதை உணர்த்துகிறது.

சூரியனைப் பிரசவிக்கும் பாறை:

தன் கிராமத்தில் இருந்த பெரிய பாறை ஒன்று சூரியனை தினமும் பிரசவிப்பதாக எண்ணினார் மீரான். அதனால் அதன் மீது ஏறி நேரில் சென்று பார்ப்பதற்கு ஆர்வமாக இருந்தார்.

அங்க ஒரு ஊசிக்கிணறு இருப்பதாகவும், அதற்கு ஒரு பெரிய பாம்பு காவல் நிற்பதாகவும் அந்த கிணற்றின் மூடியைத் திறந்தால் தண்ணீர் மேலே வந்து இந்த உலகம் அழிந்து விடும்' என்றும் அவரின் அம்மா கூறினார்.

மூட நம்பிக்கை:

இதனால் ஆர்வம் கொண்ட மீரான் ஒரு நாள் அந்தப் பாறை மீது ஏறி இயற்கையை இரசித்து நின்றார்.

அப்போது அவரின் பின் படம் எடுத்து நின்ற பாம்பைக் கண்டு அஞ்சினார் பிறகு.

அப்பாம்புடன் பழகி நட்பானார்.

அந்தப் பாம்பு மீரானின் அம்மா கூறியது கதை என்றும், மூட நம்பிக்கையின் உச்சம் என்று உண்மையை விளக்கியது.

<u>முடிவுரை:</u>

உண்மையை உணர்ந்த மீரான் பாறையில் இருந்து இறங்கினார். தாழ்வாரத்தில் கம்புடன் நின்றிருந்த தன் அப்பாவைப் கண்டு அலறினார்.

காலம் கடந்தது. தன் முப்பத்தாறாவது வயதில் மீண்டும் அந்தப் பாறை மீது ஏறி பாம்பிற்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினார்.

அல்லது

சில மனிதர்கள் பாம்புகளை விட விஷம் நிறைந்தவர்கள் என்பதையும் மனிதர்களில் பலர் சத்தியத்தின்படி நடப்பதில்லை என்பதையும் இச்சிறுகதை உணர்த்துகிறது.

“பகுத்தறிவு மூட நம்பிக்கையை அகற்றும்”

---

பகுதி-5

47) **4+2=6**

அ. ‘துன்பு உளது”…….. எனத் தொடங்கும் கம்பராமாயணம் பாடலை எழுதுக.

கம்பராமாயணம்

துன்பு உளது எனின் அன்றோ

சுகம் உளது? அது அன்றிப்

பின்பு உளது இடை மன்னும்

பிரிவு உளது என உன்னேல் ;

முன்பு உளெம் ஒரு நால்வோம்

முடிவு உளது என உன்னா

அன்பு உள, இனி, நாம் ஓர்

ஐவர்கள் ஊர் ஆனோம்

.. கம்பர்

பா வகை: கலி விருத்தம்

ஆ) “உடைத்து” என முடியும் குறளை எழுதுக

திருக்குறள்

உருவுகண்(டு) எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தோர்க்(கு)

அச்சாணி அன்னார் உடைத்து. .. திருவள்ளுவர்.